## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனம்/தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 19 மற்றும் 20 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடுகின்ற திகதியில் உள்ளவாறு கொடுக்கல் வாங்கல்களின் இறுதி நிலைமையினைக் கவனத்தில் கொண்டு வருமானங்களை இனங்காண வேண்டி இருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் கொடுக்கல் வாங்கலின் இறுதி நிலைமையினைக் கவனத்தில் கொள்ளாமல் பயிற்சிப் பிரிவில் நடாத்தப்பட்ட இரண்டு பாடநெறிகளுக்காக கிடைத்த மொத்த தொகையான ரூபா 7,920,000 ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 4,221,428 இனால் ஆண்டின் வருமானம் அதிகரித்து காண்பிக்கப்பட்டமையால் சமமான அளவினால் மிகை அதிகரித்தும் மற்றும் பொறுப்புக்கள் குறைத்தும் இனங்காணப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்களின் இறுதி நிலைமையினைக் கவனத்தில் கொண்டு வருமானங்கள் சரியான இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலங்கைப் பொதுத் தறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 34(அ) ஆம் பந்தியின் பிரகாரம் கால விகிதத்தின் அடிப்படையில் வட்டி வருமானம் இனங்காண வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் திறைசேரி உண்டியல் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் காசு அடிப்படையில் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் ஊடாக உரிய கணக்கீட்டு வழுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கால விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு வட்டி வருமானம் கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வங்கி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் | 2024 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் ஊடாக | நிலையான வைப்புப் பெறுமதி மற்றும் வட்டி |

| | | | |
|---|---|---|---|
| | பயிற்சிப் பிரிவில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 23,156,824 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 26,608,959 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக சொத்துக்கள் மற்றும் வட்டி வருமானம் ரூபா 3,452,135 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய கணக்கீட்டு வழுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடல் வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டின் 4 ஆவது காலாண்டிற்குரிய பயிற்சி நிறுவனத்தின் வாடகை செலவினத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியில் இருந்து கிடைத்த ரூபா 8,534,868 அரசாங்கத்தின் மானியம் முன்னைய சீராக்கமாக இனங்காணாமல் 2023 ஆம் ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சில் இருந்து உரிய மீண்டெழும் செலவினங்கள் அமைச்சின் செலவின விடயமான 112-2-2-4-1503/1509 வரவு வைத்தலின் ஊடாக பெறப்பட்டிருந்ததுடன் அந்த மானியத் தொகை நிறுவனத்தின் மானியமாக கணக்கீடு செய்தமை சரியாக இருந்ததுடன் வருமானம் மேலதிகமாக காண்பிக்கப்படவில்லை. | வருமானம் சரியான காலப்பகுதிக்காக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | 2024 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குரிய பயிற்சிப் பிரிவின் கட்டிட வாடகை ரூபா 1,222,116 தொகை 2023 ஆம் ஆண்டின் அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்டதன் காரணமாக சமமான பெறுமதியால் 2023 ஆம் ஆண்டின் நடைமுறைப் பொறுப்புகள் அதிகரித்தும், மிகைக் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் அட்டுறுவாக காண்பிக்கப்பட்ட ரூபா 1,222,116 தொகை 2024 சனவரி மற்றும் பெப்ரவரி மாத கட்டட வாடகையாக இருந்ததுடன் அது 2024.02.20 ஆந் திகதி செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த தொகை கணக்கீட்டு வழுவாக காண்பிக்கப்படுகின்றது. | செலவினங்களுக்கு உரித்தான காலப் பகுதியின் பிரகாரம் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா (மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத காணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 21.76 | நிலையான வைப்பு புதுப்பித்தல் அறிவித்தல் மற்றும் நிலையான வைப்புப் பதிவேடு | பதிலளிக்கப்பட வில்லை. | வட்டி வருமானங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங் களின் பெறுமானத் தேய்வு | 2.12 | சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி மற்றும் அவற்றின் கிரயம் போன்ற விடயங்களை உள்ளடக்கி நிலையான சொத்துப் பதிவேடு | ஒவ்வொரு சொத்துக்களும் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, கிரயம், திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு பெறுமதியுடன் பட்டோலை ஒன்று 2025 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் தொடர்பான சகல விபரங்களையும் உள்ளடக்கி நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 இன் 32 ஆம் இலக்க உபாயவழி ஆய்வுகள் தொடர்பான இலங்கை நிறுவனம் (திருத்த) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2000 இன் 45 ஆம் இலக்க உபாய வழி ஆய்வுகள் தொடர்பான இலங்கை நிறுவன | | | |

சட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 10(அ) ஆம் பிரிவு | நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் உரிய விடயத்துறையில் சர்வதேச பிரசித்தி பெற்ற ஐந்து நபர்களை உள்ளடக்கிய சர்வதேச தொடர்பு ஆலோசனை சபையொன்று நியமிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான ஆலோசனை சபையொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | சர்வதேச ஆலோசனை சபையொன்றை நியமிப்பதற்காக பெயர் முன்மொழிவு அடுத்துவரும் முகாமைத்துவ சபைக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு 2025.10.31 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபைக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சர்வதேச தொடர்பு ஆலோசனை சபையொன்றை நியமித்தல் வேண்டும். |
| (ii) | 10 உ (1) பிரிவு மற்றும் (2) ஆம் பிரிவுகள் | சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற 2006 செப்டம்பர் 29 ஆம் திகதி முதல் பண்டாரநாயக்க சர்வதேச உயர் ஸ்தானிகர் பயிற்சி நிறுவனம், இந்த நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டியிருந்ததுடன், அந்த நிறுவனத்தின் பிரிவொன்றாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய கற்கை பாடநெறிகளை நடாத்துதல் வேண்டும். மேலும் அந்த பயிற்சி நிறுவனத்தால் பேணிச் செல்லப்படுகின்ற ஏதாவது கணக்கு ஒன்றில் செலவு வைக்கப்பட்டுள்ள சகல பணமும் நிறுவனத்தின் நிதியத்திற்கு மாற்ற வேண்டி இருந்ததுடன் அதன் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் கவனம் தற்போது செலுத்தப்பட்டுள்ளதுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிறுவனம் இந்த நிறுவனத்திற்கு கையேற்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும், நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களாக கருதப்படல் வேண்டும். எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதி இலக்கம் 09/2009 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2(iii) ஆம் பிரிவு | பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் இதுவரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கைவிரல் அடையாள இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் இந்த ஆண்டின் இறுதிக்கு முன்னர் மேற்கொள்வதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருகை மற்றும் வெளிச் செல்கை கைவிரல் அடையாளம் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூல் | | | |
| | (i) 3.2(i) ஆம் பிரிவு | நிறுவனத்தின் பதவியணியினர், ஆட்சேர்த்தல் நடைமுறை மற்றும் சம்பள அளவுத் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) 6.6 ஆம் பிரிவு | i. கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் | 2024 சனவரி மாதத்தின் பின்னர் செயற்பாட்டுப் பணிப்பாளர் சபை | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் பதினெட்டு மாதங்கள் தாமதமாகி 2025 செப்டம்பர் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஒன்று காணப்படாது இருந்தமையால் நிதிக்கூற்றுக்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்ததன் அடிப்படையில் இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும் 2025 மே மாதத்தின் போது புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பின்னர் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் 2023 இன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | ஏதாவது ஒரு வருடத்திற்கான ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்க வில்லை. | 2016 – 2022 வரை வருடாந்த அறிக்கை தரவுகள் மற்றும் மாதிரிப் படிவங்கள் குறைபாடுகளுடன் இருந்தமையால் மீண்டும் தயாரித்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 2023 இன் வருடாந்த அறிக்கை அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயல்பாட்டு விளைவுகள் ரூபா 16,756,536 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,900,074 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,856,462 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் பாநெறிக் கட்டண வருமானம் மற்றும் திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் முறையே ரூபா 4,377,639 இனாலும், ரூபா 10,440,403 இனாலும் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் வங்கி இணக்க கூற்று தயாரித்தல், காசு வங்கியில் வைப்புச் செய்தல், காசோலை எழுதுதல் மற்றும் காசேடு பேணிச் செல்லல் போன்ற சகல பணிகளும் ஒரே ஒரு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படுவதுடன் போதியளவான வேலை பகிர்ந்தளிக்கப்படாமையின் காரணமாக இந்த பணிகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக போதியளவான வேலைகள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனம் 2006 இன் 32 ஆம் இலக்க உபாய வழி கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவனம் (திருத்தப்பட்ட) சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் இலக்காகக் கொண்டு செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் செயற்பாடுகளை உள்ளடக்கி 2026 ஆம் ஆண்டு முதல் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள், இலக்குகளை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |